**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர்: மலர்விழி**

**தேதி: 26.08.2025 நேரம்: மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

போக்குவரத்து பிரச்சனைகளுக்கு, **தூய தீர்வுகளை** உருவாக்குவதில், நம்பகமான உலக மையமாக இந்தியா மேம்பட்டு வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, வரும் வியாழக் கிழமை ஜப்பானுக்கு பயணம் மேற்கொள்கிறார்.

தமிழகம் முழுவதும் **நகர்ப்புற அரசு உதவிபெறும் பள்ளிகளில்**, மாணவர்களுக்கான **காலை உணவு திட்ட விரிவாக்கத்தை**, மாநில முதல்வர் திரு. முக. ஸ்டாலின், சென்னையில் இன்று தொடக்கி வைத்தார்.

**விநாயகர் சதுர்த்தி திருநாள்** நாளை கொண்டாடப் படுவதை ஒட்டி, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி ஆகியோர், மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

------------------------

*மோடி-குஜராத் 1 (7)*

மின்சார வாகனங்களின் பேட்டரிக்கு தேவையான **கலப்புவகை மின் முனைகளை** தயாரிக்க, குஜராத் மாநிலம் TDS லித்தியம் – அயான் பேட்டரி ஆலையில், ஜப்பானிய ஒத்துழைப்புடன் நிறுவப் பட்டுள்ள புதிய வசதிகளை, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தொடக்கி வைத்தார். இந்தியாவின் Make in India பயணத்தில், இது புதிய அத்தியாயம் என்றும், Make for the World என்னும் இலக்கை எட்டுவதில், இன்றைய தினம், மிக

முக்கிய நாள் என்றும், அவர் தமது உரையில் கூறினார். இதுகுறித்து கூடுதல் விவரங்கள்….

**(வாய்ஸ்)**

*மோடி-குஜராத் 2 (14)*

**(வாய்ஸ்)**

போக்குவரத்து பிரச்சனைகளுக்கு, தூய தீர்வுகளை உருவாக்குவதில், நம்பகமான உலக மையமாக இந்தியா மேம்பட்டு வருவதாகவும், கடந்த 10 ஆண்டுகளில் நாட்டின் மின்னனு பொருள் உற்பத்தி, 500 மடங்கு அதிகரித்து இருப்பதாகவும், பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார். மின்வாகன உற்பத்தி போன்ற எதிர்காலத் தொழில்களின் தேவைகளுக்கு ஏற்பவே, தேசிய அளவிலான முக்கிய கனிமங்கள் இயக்கத்தை அரசு தொடக்கி இருப்பதாக அவர் தெரிவித்தார்.

முன்னதாக, Made in India முத்திரையுடன், குஜராத்தில் தயாரிக்கப் பட்டுள்ள, இ-வித்தாரா பேட்டரி வாகனங்களை, பிரதமர் திரு. நரேந்திர மோடி கொடியசைத்து தொடக்கி வைத்தார். ஐரோப்பா, ஜப்பான் உட்பட, நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு, இந்த பேட்டரி வாகனங்கள் ஏற்றுமதி செய்யப்பட உள்ளன.

குஜராத்தில் இன்று பிரதமர் தொடக்கி வைத்த கலப்புவகை மின்முனை உற்பத்தியால், நாட்டின் பசுமை உற்பத்திச் சுவடுகள், மேலும் பரவலாகும் என்பதும் குறிப்பித்தக்கது.

------------------------

*மோடி-ஜப்பான்* (13)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, வரும் வியாழக் கிழமை ஜப்பானுக்கு பயணம் மேற்கொள்கிறார். ஆகஸ்ட் 29,30 ஆகிய தேதிகளில், ஜப்பானிய பிரதமர் திரு. ஷிகேரு இஷிபா-வுடன், அவர் 15ஆவது இந்தோ-ஜப்பான் வருடாந்திர உச்சி மாநாடு நடத்துவார். இருதரப்பு உறவுகளின் முன்னேற்றத்தை ஆழமாக மறு ஆய்வு செய்யும் வாய்ப்பாக இந்த சந்திப்பு அமையும் என்று, வெளியுறவுச் செயலர் திரு. விக்ரம் மிஸ்த்ரி, இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். முக்கியமான

பிராந்திய, மற்றும், சர்வதேச பிரச்சனை குறித்தும், இருதலைவர்களும் விவாதிக்க உள்ளனர். 2014ஆம் ஆண்டு பிரதமராக பதவியேற்றது முதல், திரு. நரேந்திர மோடி ஜப்பானுக்கு பயணம் மேற்கொள்வது இது 8ஆவது முறையாகும். இந்தியாவும்-ஜப்பானும், பல்வேறு பிரச்சனைகளில் ஒரே மாதிரியான கருத்துக்கள், மாண்புகள், மற்றும், நம்பிக்கையை பரஸ்பரம் பகிர்ந்து கொள்ளும் நாடுகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

------------------------

*அமித் ஷா* (14)

துடிப்பான கிராமங்கள் திட்டத்தின் கீழ், மத்திய உள்துறை அமைச்சகத்தின் எல்லை நிர்வாகப் பிரிவு சார்பில், புதுடெல்லியில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள , 2 நாள் பயிலரங்கை, உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று தொடக்கி வைத்தார். எல்லைப்புற கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அனைவருக்கும், மத்திய-மாநில திட்டங்களின் பலன்கள் முழுமையாக கிடைப்பதையும், எல்லைப்புற கிராமவாசிகள் வெளியேறாமல் அங்கேயே வசிப்பதையும் உறுதிப் படுத்துவதன் மூலம், எல்லைப் பாதுகாப்பு, மற்றும், தேசிய பாதுகாப்பை மேலும் வலுப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கம் என்று அவர் கூறினார். எல்லைப்புற கிராமங்களில், சுற்றுலா உள்ளிட்ட உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலம், உள்ளூர் மக்களுக்கான வேலை வாய்ப்புகளை பெருக்கவும், எல்லைப்புற மக்களின் கலாச்சாரத்தை பேணி வளர்க்கவும், துடிப்பான கிராமங்கள் திட்டத்தின் கீழ், நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

------------------------

*ராஜ்நாத் சிங்* (9)

பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், விசாகப்பட்டினம் கடற்படை தளத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், ஐஎன்எஸ் உதயகிரி, ஐஎன்எஸ் ஹிமகிரி ஆகிய 2 அதிநவீன போர்க் கப்பல்களை, இந்திய கடற்படையில் சேர்த்து வைத்தார். சுயசார்பு இந்தியா மற்றும் இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின் வெற்றியை வெளிப்படுத்தும்

வகையில் இக்கப்பல்கள் அமைந்து இருப்பதாக அவர் கூறினார். இந்தியாவின் 2 முக்கிய கப்பல் கட்டும் தளங்களில் கட்டப்பட்ட 2 பெரிய போர்க் கப்பல்கள், ஒரே சமயத்தில் கடற்படையில் சேர்க்கப் படுவது, இதுவே முதல்முறையாகும்.

------------------------

*ஜிஎஸ்டி* (9)

சரக்கு மற்றும் சேவை வரிவிகிதம் பற்றிய ஊகங்களை பொது மக்கள் தவிர்க்க வேண்டும் என, மத்திய மறைமுக வரிகள் வாரியம் கேட்டுக் கொண்டுள்ளது. ஜிஎஸ்டி விகிதம் பற்றிய முடிவுகள், மத்திய-மாநில அரசுகள் அடங்கிய ஜிஎஸ்டி சபை மூலம் கூட்டாக மேற்கொள்ளப் படுவதாகவும், இதுகுறித்து முன்கூட்டியே வெளியாகும் ஆதாரமற்ற ஊகங்களால், சந்தைகள் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படலாம் என்பதால், அடுத்த 3-4 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ள ஜிஎஸ்டி சபை கூட்டத்தில், அதிகாரப்பூர்வ முடிவுகள் அறிவிக்கப்படும் வரை, பொது மக்கள் காத்திருக்க வேண்டியது அவசியம் என்றும், வாரியம் கூறியுள்ளது.

------------------------

*மன் கீ பாத் (7)*

பிரதமர் திரு நரேந்திர மோடியின் 125 ஆவது மன்-கீ-பாத் எனும் மனதின் குரல் நிகழ்ச்சி வரும் 31 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் தொலைக்காட்சியின் அனைத்து அலைவரிசைகளிலும் ஒலிபரப்பாக உள்ளது. இந்நிகழ்ச்சியில் இடம் பெற வேண்டிய கருத்துக்களை பொதுமக்கள் நமோ செயலி, மை-கவ் இணையதளம் மற்றும் 1800 11 7800 என்ற கட்டணமில்லா தொலைபேசி வாயிலாகவும் வரும் 29 ஆம் தேதி வரை தெரிவிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

------------------------

*ஸ்டாலின்* (8)

தமிழகம் முழுவதும் நகர்ப்புறங்களில் செயல்படும் 2 ஆயிரத்து 429 அரசு உதவிபெறும் பள்ளிகளில், மாணவர்களுக்கான காலை உணவு திட்ட விரிவாக்கத்தை, மாநில முதல்வர் திரு. முக. ஸ்டாலின், சென்னையில்

இன்று தொடக்கி வைத்தார். அரசின் இத்திட்டத்தினால், பள்ளிக்கு வரும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து இருப்பதாக அவர் கூறினார். துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் நடைபெற்ற இவ்விழாவில், பஞ்சாப் முதலமைச்சர் திரு. பகவந்த்மான் சிறப்பு விருந்தினராக இவ்விழாவில் கலந்து கொண்டார்.

-----------------------

*விநாயகர்-வாழ்த்து* (12)

விநாயகர் சதுர்த்தி திருநாள் நாளை கொண்டாடப் படுவதை ஒட்டி, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி ஆகியோர், மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். இந்திழய பண்பாட்டின் அடையாளங்களில் ஒன்றாக பாரம்பரிய முறையில், மகிழ்ச்சியோடு கொண்டாடப்படும் விநாயகர் சதுர்த்தி பண்டிகை, மத நல்லிணக்கம் மற்றும் சமுதாய ஒற்றுமையை வளர்த்து, அனைவரின் வாழ்விலும் வளமும், நலமும் சேர்க்க தாம் வாழ்த்துவதாக, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் கூறியுள்ளார். முழுமுதற் கடவுளாம் விநாயகர் பெருமான் அவதரித்த இத்திருநாளில், அனைத்து இல்லங்களும், விநாயகரின் பரிபூரண அருளால் நிரம்பட்டும் என்றும் அனைவரின் வாழ்விலும், பொருள் வளம், மன வளம், மற்றும், உடல்நலம் சிறக்கட்டும் என்றும், முதலமைச்சர் திரு. ரங்கசாமி தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

-----------------------

*தெரெசா* (6)

பாரத ரத்னா அன்னை தெரேசா பிறந்த நாள் இன்று புதுச்சேரியில் அரசு சார்பில் கொண்டாடப் பட்டது. பாரதி பூங்காவில் உள்ள அன்னை தெரேசாவின் திருவுருவச் சிலைக்கு, பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், அமைச்சர் திரு. ஜான்குமார், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர் திரு. சாய் சரவணன் குமார் ஆகியோர், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

-----------------------

*நல்லாசிரியர் (8)*

புதுச்சேரி கதிர்காமம் தில்லையாடி வள்ளியம்மை அரசு மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியர் ரெக்ஸ் என்கிற ராதாகிருஷ்ணன், தேசிய நல்லாசிரியர் விருதுக்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். விருது கிடைத்து இருப்பது குறித்து, இன்று அவர் எமது செய்தியாளரிடம் பேசுகையில், பள்ளி மாணவர்களுக்கும், சமுதாயத்திற்கும் தாம் ஆற்றி வரும் பணிகளே விருதுக்கு காரணம் என்றும், அப்பணிகளை மேலும் ஊக்கப்படுத்துவதாக நல்லாசிரியர் விருது அமைந்துள்ளதாகவும் கூறினார். ஆசிரியர் திரு. ராதாகிருஷ்ணன் மேலும் கூறுகையில்.....

**(வாய்ஸ்-ராதாகிருஷ்ணன்)**

------------------------

*காரைக்கால் ஆட்சியர் (9)*

காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திரு. ரவி பிரகாஷ், இன்று காரைக்கால் தலைமை மருத்துவமனையில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, நோயாளிகளுக்கான மருந்து வினியோகம், கேன்டீன், மற்றும், கழிவறை வசதிகளை மேம்படுத்தவும், பயிற்சி மருத்துவர்கள், மற்றும் செவிலியர்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும், அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். காரைக்கால் பொதுப் பணித் துறை கண்காணிப்புப் பொறியாளர் திரு. சந்திரசேகரன், அரசு மருத்துவமனையின் உள்ளிருப்பு மருத்துவ அதிகாரி டாக்டர் உமா மகேஷ்வரி உள்ளிட்டோர் இந்த ஆய்வின் போது உடன் இருந்தனர்.

------------------------

*புதுச்சேரி வேளாண்மை (7)*

காரைக்காலில், மேலகாசாக்குடி உழவர் உதவியகத்திற்கு உட்பட்ட துத்தகுடி கிராமத்தில், கால்நடைகளுக்கான தாது உப்புக் கலவையின் முக்கியத்துவம் குறித்த செயல் விளக்கம், இன்று நடைபெற்றது. வேளாண் துறையின் கீழ் செயல்படும், வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை சார்பில் ஆத்மா திட்ட இயக்குநர் திரு. ஆர். கணேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், 25க்கும் மேற்பட்ட கால்நடை வளர்ப்போர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

-----------------------

வானிலை (15)

இன்று, ஒடிசா கடற்கரைக்கு அப்பால், வடமேற்கு வங்கக் கடலில் உருவாகி உள்ள காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி, மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, அடுத்த 2 நாட்களில், மேலும் வலுப்பெறக் கூடும் என எதிர்பார்க்கப் படுகிறது. இன்றைய தினம், தமிழகத்தில் ஓரிரு இடங்கள், மற்றும், புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளில்,லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், நாளை, கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், மற்றும், நீலகிரி மாவட்டத்தில், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. செப்டம்பர் 1ஆம் தேதி வரை, மழை நீடிக்கலாம் என்றும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள, தமிழகத்தின் கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் உள்ளிட்ட இடங்களில் தலா 1செ.மீ மழை பதிவாகி உள்ளது.

-----------------------

விளையாட்டு (4)

கஜகஸ்தானில் நடைபெறும் 16ஆவது ஆசிய துப்பாக்கி சுடும் சேம்பியன் பட்டப் போட்டிகளின் மகளிர் 50 மீட்டர் ரைபிள் பிரிவில், இந்திய வீராங்கனை சிஃப்ட் கவுர் சம்ரா, தனிநபர் தங்கப் பதக்கம் வென்றுள்ளார். இப்பிரிவில், சீனா 2ஆம் இடமும், ஜப்பான் 3ஆம் இடமும் பெற்றன.

-----------------------

போர் முறை (16)

எதிர்காலப் போர்களில், போர்த் தந்திரங்களை விட, தொழில்நுட்பங்களுக்கே அதிக முக்கியத்துவம் இருக்கும் என்பதால், செயற்கை நுண்ணறிவு போன்ற நவீன தொழில்நுட்பங்கள் மூலம், பாதுகாப்பு உற்பத்தித் துறையில் சுயசார்பை அதிகரித்து,

முப்படைகளிடையே ஒருங்கிணைப்பை வலுப்படுத்த வேண்டியது அவசியம் என்று, முப்படைகளின் தலைமை தளபதி ஜெனரல் அனில் சௌகான் கூறியுள்ளார். மத்திய பிரதேஷ் மாநிலம் **மஹூ**-விலுள்ள ராணுவப் போர்க் கல்லூரியில், முப்படைகளின் பங்கேற்புடன் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள 2 நாள் ரண சம்வாத் மாநாட்டில் பேசுகையில், அவர் இவ்வாறு கூறினார். நவீன முறையில் மேற்கொள்ளப்பட்ட ஆப்ரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை மூலம், இந்தியா பல பாடங்களை கற்றுள்ளதாகவும், இதில் பல பாடங்கள், ஏற்கனவே செயல்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், திரு. அனில் சௌகான் தெரிவித்தார். இந்தியாவின் **சுதர்ஷன் சக்ரா-இரும்புக்** குவி மாடம், எதிரிகளின் விமானங்கள், மற்றும், ஏவுகணைகளை நடுவானிலேயே கண்டுபிடித்து தாக்கி அழிக்க வல்லதாக திகழும் என்று, அவர் மேலும் கூறினார்.

-----------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

போக்குவரத்து பிரச்சனைகளுக்கு, **தூய தீர்வுகளை** உருவாக்குவதில், நம்பகமான உலக மையமாக இந்தியா மேம்பட்டு வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, வரும் வியாழக் கிழமை ஜப்பானுக்கு பயணம் மேற்கொள்கிறார்.

தமிழகம் முழுவதும் **நகர்ப்புற அரசு உதவிபெறும் பள்ளிகளில்**, மாணவர்களுக்கான **காலை உணவு திட்ட விரிவாக்கத்தை**, மாநில முதல்வர் திரு. முக. ஸ்டாலின், சென்னையில் இன்று தொடக்கி வைத்தார்.

**விநாயகர் சதுர்த்தி திருநாள்** நாளை கொண்டாடப் படுவதை ஒட்டி, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி ஆகியோர், மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.